## அகில பாரதிய துறவியர்கள் சங்கம்
## தாம்ரபர்ணி மஹா புஷ்கரம் -2018

நிர்வாக அலுவலகம் :
75 A, இளங்கோ அடிகள் வீதி,
கொக்கரகுளம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் அருகில்.
திருநெல்வேலி - 627009




# விழா அழைப்பிதழ்

எல்லாம் எல்ல இறையருளாலும், குருவருளாலும் வருகின்ற விளம்பி வருடம் புரட்டாசி 25 ம் நாள் வியாழன் தொடங்கி ஐப்பசி 5 ஆம் நாள் திங்கள் வரை (11.10.2018 முதல் 22.10.2018 வரை) தாம்ரபர்ணி மஹா புஷ்கரம் 2018 புனிதத் தீர்த்தமாடுதல் பெருவிழா நடைபெறுகிறது.

**சிருங்கேரி ஸ்ரீ சாரதாபீடத்தின் பீடாதிபதி ஜெகத்குரு சங்கராச்சாரிய மஹா சுவாமிகள் மற்றும் அனைத்து சங்கராச்சாரியார்கள், ஆதீனங்கள், ஜீயர்கள், பீடாதிபதிகள், ஆச்சார்யர்கள், குருமகாசன்னிதானங்கள்** ஆகியோர்களின் ஆசியுடனும், வழிகாட்டுதலுடனும் நடைபெறும் இப்புனிதமான தேசிய விழாவில் அனைத்துத் துறவியர் பெருமக்களும் அடியார்கள் திருக்கூட்டமும் திரளாகக் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

பாபநாசம், திருநெல்வேலி, முக்கூடல் உட்பட தாம்ரபர்ணி நதிக்கரையில் 149 புனிதப் படித்துறைகளில் இவ்விழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட உள்ளது.

**11.10.2018 வியாழன் அதிகாலை பாபநாசத்தில் அகில பாரதத் துறவியர்களின் சங்கமமும்**

மற்றும்

**12.10.2018 வெள்ளிக்கிழமை பிற்பகல் திருநெல்வேலி மாநகரில் மாபெரும் ஆன்மீக கலாச்சார ஊர்வலமும் நடைபெறவுள்ளது.**

மேற்படி துறவியர் சங்கமம் மற்றும் ஆன்மீக ஊர்வலத்தில் தாங்களும், தங்கள் அடியார் பெருமக்களும் திரளாகக் கலந்துக் கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறோம்.

ஒவ்வொரு துறவியரும் அவரவர் பகுதியில் இந்தத் தாம்ரபரணி மஹா புஷ்கரம் 2018 விழாவைப் பற்றிய அந்தந்த மடத்தின் முகவரிகளுடன் அந்தந்த துறவியர்களே துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தும், முக்கியமான இடங்களில் அறிவிப்புத் தட்டிகள் வைத்தும் இவ்விழாவைக் குறித்துத் தகவல்களை மக்களுக்கு சென்று சேர்க்குமாறு வேண்டிக் கொள்கிறோம்.

துறவியர்களுக்கு அன்னதானம், வஸ்திரதானம், சொர்ணதானம், பாதபூஜைகள் போன்றவைகளுக்காக நன்கொடைகள் வழங்க விரும்புபவர்கள் கீழ்கண்ட வங்கிக் கணக்கு எண்.




Name - Thamirabarni Maha pushkaram 2018
Account Number 918020048166395
IFSC CODE - UTIB0002095
Axis bank, Palayamkottai, Tirunelveli.

வங்கியில் செலுத்திவிட்டு அதற்கான சீட்டை எங்களுக்கு **94865 45618** வாட்ஸ்ஆப்-ல் அல்லது தபாலில் அனுப்பி வைக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறோம்.

துறவியர்கள் தங்கள் வருகையை முன்கூட்டியே போன் மூலமோ, நேரடியாகவோ தெரிவித்தால் அழைப்பிதழில் தங்கள் பெயர் வெளியிடுவதற்கும் உணவு மற்றும் தங்குமிடம் வசதிகள் ஏற்பாடு செய்வதற்கும் பயனுள்ள வகையில் இருக்கும் என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

என்றும் இறைபணியில்

**தாம்ரபர்ணி மஹா புஷ்கரம் 2018 விழாக் கமிட்டி**

நம் திருநாட்டில் மட்டும் நதிகளைத் தெய்வமாகக் கருதி வழிபாடு செய்கின்றோம். நாள், நட்சத்திரம், ராசி என்று முன்னோர்கள் எல்லாவற்றையும் ஆய்வு செய்து முறைப்படுத்திக் கொடுத்துள்ளார்கள். அதுபோல் நமக்கு உதவுகின்ற எல்லாவற்றையும் இறையம்சமாக போற்ற வேண்டும் என மரபுகளை உருவாக்கியுள்ளனர். அதன் படி 12 ராசிகளுக்கு 12 நதிகளை அதிதேவதைகளாக குறிப்பிட்டுள்ளனர். 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை குருபெயர்ச்சியின் போது அந்த ராசிக்கு உரிய நதியில் புனித நீராட வேண்டும். அந்த நதியை நன்றியுடன் வணங்க வேண்டும் என்ற முறையை உருவாக்கியுள்ளனர்.

நம் நாடு ஆயிரம் ஆண்டுகள் அந்நியரால் அடிமைப்படுத்தப்பட்டபோது மரபுகள் எல்லாம் மறைக்கப்பட்டது மறக்கப்பட்டது மறந்துவிட்டது. மீண்டும் நமது தார்மீக நெறிகளை புதுப்பிக்க வேண்டியது நமது கடமை. அந்த அடிப்படையில் மேஷ ராசிக்கு கங்கையில் கும்பமேளா கொண்டாடப்படுகிறது. அதே போன்று நர்மதா புஷ்கரம், கிருஷ்ணாபுஷ்கரம், காவிரி புஷ்கரம் என்று வரிசையாக கொண்டாடப்பட்டு வருகிறது. அதன் அடிப்படையில் விருச்சிக ராசிக்குரிய நதி தாம்ரபர்ணி வருகின்ற 2018 அக்டோபர் 11 ந் தேதி முதல் 22 ந் தேதி வரை புஷ்கர புண்ணிய காலம் துவங்குகின்றது என சிருங்கேரி மகா சந்நிதானங்கள் ஆசிர்வதித்துள்ளார்கள். தாம்ரபர்ணி நதி துவங்குகின்ற பாபநாசம் முதல் கடலில் சங்கமிக்கும் புன்னைக் காயல் வரை 149 படித்துறைகளில் பொதுமக்களை ஒன்று திரட்டி 12 நாட்களுக்கு புனித நீராடவும், வழிபாடுகள் செய்யவும் விரிவான ஏற்பாடுகள் நடைபெற்று வருகிறது. எல்லா சமுதாயத்தைச் சேர்ந்தவர்களும், எல்லா சமய மரபுகளையும் ஒருங்கிணைத்து தாம்ரபர்ணி திருவிழா கொண்டாட வேண்டும். துறவியர்கள் மாநாடு, சதுர்வேத பாராயணம், திருவாசகம் முற்றோதல், நாலாயிர திவ்யபிரபந்தப் பாராயணம், லலிதா ஸஹஸ்ரநாம பாராயணம், விஷ்ணு ஸஹஸ்ரநாம பாராயணம், அகில திரட்டு, திருவருட்பா, அருட்பெருஞ்ஜோதி அகவல் பாராயணம் மற்றும் திருவடிப் புகழ்ச்சி பாராயணம் போன்ற எல்லா சாஸ்திரங்களையும் புண்ணிய காலத்தில் நதிக்கரையில் பாராயணம் செய்தால் அன்னை தாம்ரபர்ணி அதைக்கேட்டு வாழ்த்தி ஆசீர்வதிப்பதாக நம்பிக்கை. நதிகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வுகள் மக்களிடம் உண்டாக வேண்டும் என்ற நோக்கில் அனைவரும் நல்ல ஒத்துழைப்பு நல்கி, விழா சிறக்க உதவிட வேண்டுகிறோம்.



நம் திருநாட்டில் மட்டும் நதிகளைத் தெய்வமாகக் கருதி வழிபாடு செய்கின்றோம். நாள், நட்சத்திரம், ராசி என்று முன்னோர்கள் எல்லாவற்றையும் ஆய்வு செய்து முறைப்படுத்திக் கொடுத்துள்ளார்கள். அதுபோல் நமக்கு உதவுகின்ற எல்லாவற்றையும் இறையம்சமாக போற்ற வேண்டும் என மரபுகளை உருவாக்கியுள்ளனர். அதன் படி 12 ராசிகளுக்கு 12 நதிகளை அதிதேவதைகளாக குறிப்பிட்டுள்ளனர். 12 ஆண்டுகளுக்கு ஒரு முறை குருபெயர்ச்சியின் போது அந்த ராசிக்கு உரிய நதியில் புனித நீராட வேண்டும். அந்த நதியை நன்றியுடன் வணங்க வேண்டும் என்ற முறையை உருவாக்கியுள்ளனர்.

வேதங்கள், சாஸ்திரங்கள் தோன்றிய நதிக்கரையில் துறவியர்கள் நதியில் மூழ்கியிருந்து துறவு ஏற்பதால் நதி துறவியர்களுக்குத் தாயாக

விளங்குகிறது. இது போன்ற புண்ணிய காலங்களில் நீராடாமல் தவிர்ப்பது பெற்றதாயைப் புறக்கணித்த மகனுக்கு சமமாகும். எனவே துறவியர்கள் புஷ்கர புண்ணிய காலத்தில் முதலில் நீராடி துவக்கி வைக்க வேண்டும். அந்த வகையில் அக்டோபர் 11 ந் தேதி காலை 4.30 மணி முதல் 6.00 மணி வரை பிரம்ம முகூர்த்த காலத்தில் பாபநாசம் படித்துறையில் நீராட ஏற்பாடு செய்து வருகிறோம். பாபநாசம் தொடங்கி புன்னைக் காயல் வரை தாம்ரபர்ணியின் இரு கரைகளிலும் உள்ள சுற்று வட்டார கிராமத்தைச் சேர்ந்தவர்கள் படித்துறைகளை தேர்வு செய்து தாம்ரபர்ணி பஷ்கர திருவிழா 2018 என்ற பெயரில் விழா கமிட்டிகள் அமைத்தும் பல்வேறு சமுதாய சமய அமைப்புகள் தாங்கள் தங்கள் அமைப்பின் பெயரிலும் அவரவர்கள் விரிவான ஏற்பாடுகளைச் செய்திட வேண்டும்.

கிராமக் கோயில்களில் பூசாரிகள் மற்றும் நிர்வாகிகள் உற்சவ மூர்த்திகளை தீர்த்தவாரி (புனித நீராடல்) செய்வதற்காக எடுத்துச் செல்லுதல், புஷ்கர புனித நீர் கலசம் எடுத்து வந்து கோயில் மூலவர்களுக்கு அபிஷேகம் செய்தல் போன்ற நிகழ்ச்சிகளை நடத்தலாம். பொதுமக்கள் புஷ்கர புண்ய காலத்தில் ஏழு தலைமுறையைச் சேர்ந்த முன்னோர்களை மானசீகமாக அர்க்கியம் விடலாம். இதனால் முன்னோர்கள் ஆத்மசாந்தி அடைவார்கள். குறிப்பாக விருச்சிக ராசிக்குரியவர்கள் இந்த விழாவை பொறுப்பேற்று சிறப்பு செய்யலாம். எல்லாவற்றிற்கும் மேலாக தாம்ரபர்ணியில் திருவிழா எடுக்கிறோம். இவ்விழாவில் ஜாதி, மதம், மொழி பாராமல் அனைவரும் தம்முடைய கடமை என்ற உணர்வோடு இப்புனிதப் பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டுகிறோம். ஆர்வம் உடையவர்கள் போன் மூலம் தொடர்பு கொள்ளுங்கள். அன்னதானம், பக்தர்கள் தங்கும் வசதி, வழிபாடுகள் போன்றவற்றிற்கு உதவ விரும்பும் அன்பர்கள் தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

## குருப்பெயர்ச்சி நடைபெறும் ராசிக்குரிய புண்ணிய நதிகள்

| வ. எண் | குருபகவான் பிரவேசிக்கும் ராசி | புண்ணிய நதிகள் |
|---|---|---|
| 1. | மேஷம் | கங்கை |
| 2. | ரிஷபம் | நர்மதை |
| 3. | மிதுனம் | சரஸ்வதி |
| 4. | கடகம் | யமுனை |
| 5. | சிம்மம் | கோதாவரி |
| 6. | கன்னி | கிருஷ்ணா |

| வ. எண் | குருபகவான் பிரவேசிக்கும் ராசி | புண்ணிய நதிகள் |
|---|---|---|
| 7. | துலாம் | காவிரி |
| 8. | விருச்சிகம் | தாம்ரபர்ணி |
| 9. | தனுசு | பிரம்மபுத்திரா |
| 10. | மகரம் | துங்கபத்திரா |
| 11. | கும்பம் | சிந்து |
| 12. | மீனம் | பரணிதா (கோதாவரி உபநதி) |

என்றும் இறைபணியில்


**தவத்திரு மருதாசல அடிகளார்**
பேரூராதீனம் இளையபட்டம்,
தலைவர், அகில பாரதிய துறவியர்கள் சங்கம்.

**தவத்திரு சுவாமி இராமானந்தா**
செயலாளர், அகில பாரதிய துறவியர்கள் சங்கம்
தலைவர்-தாம்ரபர்ணி மஹா புஷ்கரம் 2018 விழாக் குழு
94868 47005

**சுவாமி வேதாந்தானந்தா**
பொருளாளர், அகில பாரதிய துறவியர்கள் சங்கம்.
9486545618, 7708921014

**எஸ். முத்தையா [எ] குமார்**
செயலாளர்
தாம்ரபர்ணி மஹா புஷ்கரம் 2018 விழாக் குழு
94437 37592


மற்றும் துணைத்தலைவர்கள், இணைச் செயலாளர்கள், உறுப்பினர்கள்,
மற்றும் தாம்ரபர்ணி நதிக்கரையில் அமைந்துள்ள அனைத்து புண்ணிய படித்துறைகளின்
புஷ்கர விழா குழு நிர்வாகிகள் மற்றும் உறுப்பினர்கள்.